செ.வெ.எண்: 113/2017 நாள்: 14.02.2017

# பத்திரிகைசெய்தி

2017 ஜனவரி 1ம் தேதியைதகுதிநாளாகக் கொண்டு மேற்கொள்ளப் பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத்திருத்தம், கடந்த ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி வரைவுப்பட்டியல் வெளியீட்டுடன் தொடங்கியது. வாக்காளர் பட்டியலில் பெயர்சேர்த்தல், நீக்கம், திருத்தம், இடமாற்றம் செய்ய விண்ணப்பங்கள் கடந்த ஆண்டு செப்டம்பர் 1ம் தேதி முதல் 30ம் தேதிவரை பெறப்பட்டு, கடந்த ஜனவரி 5ம் தேதி வெளியிடப்பட்ட இறுதி வாக்காளர் பட்டியலில் 36,156 சேர்க்கப்பட்டுள்ளனர். புதிய வாக்காளர்களுக்கு தமிழகத்தில் உள்ள இ-சேவை மையங்கள் மூலம் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பத்தில் தங்களது கைப்பேசி எண்ணை அளித்துள்ள புதிய வாக்காளர்களுக்கு ஒரு தனிப்பட்ட அடையாள எண் குறுஞ்செய்தி மூலம் அனுப்பப்படும். இந்த அடையாள எண்ணை தங்கள் பகுதிக்கு அருகில் உள்ள இ-சேவை மையத்தில் காண்பித்து வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதற்காக புதிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. தங்களுடைய கைபேசி எண்ணை அளிக்காத புதிய வாக்காளர்கள், தேர்தல் துறையின் கட்டணமில்லா உதவி எண் 1950-ஐ தொடர்பு கொண்டு கைபேசி எண்ணை பதிவு செய்ய வேண்டும். அவர்களுக்கும் அடையாள எண் அனுப்பப்படும். அவர்களும் தங்களுடைய ஏதேனும் ஒரு புகைப்பட அடையாளச் சான்றை காண்பித்து இ-சேவை மையங்களில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

மாவட்டதேர்தல் அலுவலர்மற்றும்
மாவட்டஆட்சித்தலைவர்,
கன்னியாகுமரிமாவட்டம்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.